2021 ஆகஸ்ட் 31]

15 quarry–*களில் 12* quarry–*களை அரசு மூடிவிட்டது. இப்பொழுது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், கேரளத்திற்கு தூத்துக்குடி, திருநெல்வேலியிலிருந்து கனிமங்களை அவர்களே ஏற்றிக்கொண்டு போகிறபோது,* Eco–sensitive area *பாதிக்கப்படுகிறது என்ற கவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, அதில் நாங்களும் கவலைகொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தியடையும் வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்து, கட்டுப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

பாதாள சாக்கடைத் திட்டம்

***127—திரு. S.R. இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம் ஆகிய பேரூராட்சிகளை செம்பாக்கம் நகராட்சியுடன் ஒருங்கிணைத்து பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த, TNUIFSL *நிறுவனத்தின்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பேரூராட்சிகளுடன் செம்பாக்கம் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளையும், தாம்பரம் நகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாகத் தரமுயர்த்த 24–8–2021 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற மானியக்*

கோரிக்கையின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே, சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். இந்தக் கூட்டத் தொடரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முதல் கேள்வி எனக்கு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிட்லப்பாக்கம், செம்பாக்கம் மற்றும் மாடம்பாக்கம் உள்ளிட்ட மூன்று பகுதிகளையும் ஒருங்கிணைத்து பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்லியிருக்கின்றார்கள். பல்லாவரம் நகராட்சியை ஒட்டியிருக்கின்ற பகுதிதான், சிட்லப்பாக்கம் பகுதி, அருகில் இருக்கின்ற செம்பாக்கம், தாம்பரம், பல்லாவரம் ஆகிய மூன்று நகராட்சிகளின் மையப் பகுதியிலிருக்கின்ற இந்த சிட்லப்பாக்கம் பகுதி, வேகமாக வளர்ந்து வந்துகொண்டிருக்கின்ற பகுதி. ஆகவே, வெகு விரைவில் அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லப்பாக்கம் மட்டுமல்ல; இந்தாண்டு ஓசூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய 4 மாநகராட்சிகள், செங்கல்பட்டு நகராட்சி, நந்திவரம்–கூடுவாஞ்சேரி, பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், மாங்காடு மற்றும் குன்றத்தூர் ஆகிய 7 பேரூராட்சிகள், ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம் துரைப்பாக்கம், ஜல்லடம்பேட்டை, நந்தம்பாக்கம், மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, இடையான்சாவடி, சடையான்குப்பம்*

2021 ஆகஸ்ட் 31]

மற்றும் கடப்பாக்கம் ஆகிய 17 சென்னை மெட்ரோ பகுதிகளில் 3,940 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அனைத்துப் பகுதிகளும் ஆய்வு செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தாம்பரம் நகராட்சியை, மாநகராட்சியாகத் தரமுயர்த்தி நமது அரசு அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றது. நான் சட்டமன்ற உறுப்பினராக முதன்முதலாக 2006 ஆம் ஆண்டில் வந்தபோது, என்னுடைய முதல் கன்னிப் பேச்சில் தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருந்தேன், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது தாம்பரத்திற்கு வந்து பொதுக் கூட்டத்தில் பேசியபோது அளித்த வாக்குறுதிப்படி இன்றைக்கு தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தாம்பரம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அறிவிப்பு வந்தவுடன், தாம்பரம் மக்களுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது; திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தால், சொல்கின்ற பணியைக் கண்டிப்பாக செய்து தரும் என்ற ஒரு நம்பிக்கை இன்றைக்கு பொது மக்கள் மத்தியில் அதிக அளவில் எழுந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில், பல பேரூராட்சிகளையும், நகராட்சிகளையும் உள்ளடக்கிச் சொல்லியிருக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டில், தாம்பரம் தொகுதி என்பது மிகப் பெரிய தொகுதியாக இருந்தது. இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி என்பது பழைய தாம்பரம் தொகுதிதான், இன்றைக்கு புதிதாக தாம்பரம் மாநகராட்சி என அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல்லவபுரம் நகரத்தைத் தவிர, அனைத்துப் பகுதிகளும் அந்தத் தொகுதியில் உள்ளது. நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். முதன்முதலில் 1996–ல் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவந்தபோது, பொதுமக்களுக்கு பயன்பாட்டுத் திட்டங்களில் (BOT scheme)

ஆரம்பிக்கப்பட்டது, ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டது. இவற்றில் ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. 12 ஆண்டுகளாகியும் தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. என் தொகுதிக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட வளசரவாக்கம் தொகுதி, ஆவடி, அம்பத்தூர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி கேளுங்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்குடி, சோழிங்கநல்லூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளிலெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. இன்றைக்கு மாடம்பாக்கம், செம்பாக்கம் மற்றும் சிட்லப்பாக்கம் ஆகிய பகுதிகளை இணைத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெருங்களத்தூர் பகுதி, முடிச்சூர் பகுதி, அகரம் பகுதி, பீர்க்கன்கரணை பகுதி ஆகியவற்றை இணைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இவற்றுக்கெல்லாம் அதிக அளவில் நிதி ஆதாரத்திற்கு கடன்கூட வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, 10 ஆண்டுகள் கழித்துதான் பத்திரிகைகளில் மாநகராட்சி ஆன செய்தியே வந்திருக்கின்றது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, துரிதமாக, வளர்ந்துகொண்டு வருகின்ற பகுதி, தாம்பரம். தமிழ்நாடு முழுவதற்கும் ஒரு கணக்கு இருந்தால், தாம்பரம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி கேளுங்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பதை*

2021 ஆகஸ்ட் 31]

கவனத்தில் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே, பாதாள சாக்கடைப் பணிகள் குறித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கிறபோது, 7 அடி ஆழம், 8 அடி ஆழத்திற்கு பள்ளம் பறித்து, அங்கு குழாய்களைப் பதித்து, அதற்கு ஆங்காங்கு concrete slab போடுவதற்கு நீண்ட காலம் ஆகிறது என்ற காரணத்தால், இப்போது புதிதாக அந்த contractors–களிடம் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, ஒவ்வொரு பகுதியையும் இணைக்கிற பகுதியை precasting முறையிலே செய்ய வேண்டுமென்றும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறபோது, 8 அடி அல்லது 9 அடி ஆழம் என்று வருகின்றபோது, ஓர் இடத்திலே மணலாக இருக்கிறது; ஓர் இடத்திலே மண்ணாக இருக்கிறது; ஓர் இடத்திலே கல்லாக இருக்கிறது, எங்களுக்கு விலை கட்டுப்படியாகவில்லை என்று contractors சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அதிலே கொஞ்சம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது. எனவே, இவை அனைத்தையும் அறிந்துதான் இனி திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடிப்பதற்கான அனைத்துப் பணிகளுக்கும் ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி துணைக் கொறடா திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் அரக்கோணம் நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி நிறைவடைந்து, வீடுகளுக்கெல்லாம் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகிறது. அரக்கோணம் நகரம், மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய விரிவடைந்து வருகின்ற நகரம்; நகரம் விரிவடைந்த பகுதிகளில் உள்ள 24 தெருக்களில் சுமார் 7 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம் விடுபட்டிருக்கிறது. எனவே, விடுபட்டதைத் தொடர்ந்து 24 தெருக்களுக்கு, 7 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து நகரங்களிலும், வளர்ந்து வருகின்ற நகரங்களில் விரிவுபடுத்தப்படுகின்ற பகுதிகளிலே இந்தப் பிரச்சினை இருக்கின்றது. விரிவாக்கப்பட்ட பகுதிகளில், ஏற்கெனவே பாதாள சாக்கடை போடப்பட்டு, விடுபட்ட பகுதிகள் எவையென்று கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கணக்கு எடுக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதிகளையெல்லாம் இணைத்து, புதிய திட்டமாக உருவாக்கி, விரைவிலே அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிரிலே அமைச்சராக இருந்தவர் இருக்கிறார். எங்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களெல்லாம் என்னவென்று சொன்னால், பாதாள சாக்கடைத் திட்டம் என்று வருகின்றபோது, முதலிலே குடிநீர் இணைப்பு, பிறகு கழிவுநீர் இணைப்பு என்பதெல்லாம் இல்லாமல், தொடர்ந்து இரண்டையும் இணைத்து கொண்டு செல்கின்ற அளவிற்கு திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு, அந்தப் பணியை முடிப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பேரூராட்சியில், கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊராட்சியா, பேரூராட்சியா, நகராட்சியா?

திரு. மு.பெ. கிரி: பேரூராட்சிப் பகுதி; செய்யாறு தொடங்குகின்ற இடத்தில் கழிவுநீரெல்லாம் செய்யாற்றிலே கலந்து, செய்யாறு தண்ணீர் மாசுபடுகிறது. செய்யாறு, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பாசனத்திற்குப்

ALONE TRIUMPHS

2021 ஆகஸ்ட் 31]

பயன்படுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முறை, பட்ஜெட் தாக்கல் செய்யும்போதே "ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி அப்படி இருக்குமானால், நிச்சயமாக இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

பொறியியல் கல்லூரி

***686—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி தொகுதியில் 5 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 3 சுயநிதி Polytechnic *கல்லூரிகளும், 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 22 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள்,*